**MCOP NO. 118 /2015**

**Date 20.11.2025**

**எ.ம.சா.1 மாதா**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடந்ததை காட்டக்கூடிய வரைபடம், பார்வைமகஜர் போன்ற ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. என் மகன் 10ம் வகுப்பு வரை படித்துள்ளான். என் மகனின் வருமானத்திற்குரிய சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மகனின் ஓட்டுநர் உரிமத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த காலகட்டத்தில் 1ம் எதிர் மனுதாரர் 2ம் எதிர் மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த 2ம் எதிர் மனுதார் காப்பீட்டுத் தொகை கொடுத்துப் போக கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்பில் கோரிய பரிகாரங்கள் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.